தேவனின் அன்பு ஊழியங்கள்

மங்கள வார்த்தை

VOL- IV - ISSUE - IX - மாத இதழ் - செப்டம்பர் 2023

நிலைபெயராத சமாதானம்!

மனம் திறந்து சில வார்த்தைகள்... 3
(சகோ. T. ஸ்டீபன், ஸ்தாபகர், தேவனின் அன்பு ஊழியங்கள்)

இம்மாத மங்கள வார்த்தை: நிலைபெயராத சமாதானம்! 4
(சகோ. T. ஸ்டீபன், ஸ்தாபகர், தேவனின் அன்பு ஊழியங்கள்)

பெண்கள் பகுதி: நீ விலையேறப்பெற்றவள்! 10
(சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன், தேவனின் அன்பு ஊழியங்கள்)

வேத வினா போட்டி 12
(சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன், தேவனின் அன்பு ஊழியங்கள்)

அற்புத சாட்சிகள்! 13

ஆகஸ்ட் மாத கூட்டங்களின் அறிக்கை! 15

வளரும் சென்னை ஜெப கோபுரம்! 20

மார்வெல் திருமண தகவல் மையம் 21

சிறுவர் பகுதி: குறை சொல்லாதே, நன்றி சொல்! 22
(சகோதரி ஸ்டெஃபி ஸ்டீபன், தேவனின் அன்பு ஊழியங்கள்)

வாலிபர் பகுதி: கர்த்தர் என் நங்கூரம்! 25
(Dr. பவ்யா டெரில் ஸ்டீபன், தேவனின் அன்பு ஊழியங்கள்)

தொலைக்காட்சி ஊழிய பங்காளர் பகுதி 28

தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள் 33

எங்கள் சேவைகள் 35

மனம் திறந்து
சில வார்த்தைகள்...

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே,

ஆண்டவரும், உலக இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்கள் யாவரையும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்!

கர்த்தருடைய கிருபையினாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் கடந்த மாதத்தில், சென்னையில் நடைபெற்ற "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" (ஆகஸ்ட் 5) உபவாசக் கூடுகையிலும், "ஆறுதலைத் தேடி ஒரு நாள்" (ஆகஸ்ட் 6) சுகமளிக்கும் ஆராதனையிலும், கோவையில் நடைபெற்ற "குடும்ப ஆசீர்வாதக் கூடுகையிலும்" (ஆகஸ்ட் 12), சென்னையில் நடைபெற்ற வியாபாரிகள் ஆசீர்வாதக் கூடுகையிலும் (ஆகஸ்ட் 15), குமரி மாவட்டம், ஆயிரந்தெங்கில் நடைபெற்ற நற்செய்திப் பெருவிழாவிலும் (ஆகஸ்ட் 18,19,20), துபாய் தேச ஊழியங்களிலும் (ஆகஸ்ட் 25,26, 27) ஆண்டவர் இந்த அடிமையை வல்லமையாய் பயன்படுத்தினார். அநேக சாட்சிகளை அவர் எழுப்பினார். எனவே இந்தப் புதிய மாத துவக்கத்தில் அவருக்கு கோடான கோடி நன்றிபலிகளை ஏறெடுக்கிறேன் (சங்கீதம் 103:1,3).

பிறந்திருக்கிற இந்தப் புதிய மாதத்தை தேவ துணையோடு வரவேற்போம். கர்த்தர் தாமே இந்தப் புதிய மாதத்தை உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் ஆசீர்வதித்துத் தரும்படி நான் கருத்தாய் ஜெபித்துள்ளேன்.

உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்" (சங்கீதம் 84:11).

என்ற வேத வசனத்தின்படி, கர்த்தர் தாமே, இந்தப் புதிய மாதத்தில் உங்கள் வாழ்வில் நன்மையான காரியங்களை, நன்மையான ஈவுகளை தந்தருளி, தடைபட்ட சுபகாரியங்களை எல்லாம் நடத்திக் கொடுத்து, உங்களை உயர்த்தி அழகு பார்ப்பாராக!

மேலும் இந்த உலகத்தில் ஆண்டவரை தேடுகிறவர்கள் ஒவ்வொரு நாளும் குறைந்துகொண்டே வருகிறார்கள். அவர் தம்மை தேடுகிறவர்கள் யாராவது இந்த உலகில் இருக்கிறார்களா? என்று பரலோகத்திலிருந்து, பார்த்துக்கொண்டே இருக்கிறார் (சங்கீதம் 53:2). எனவே, நம்முடைய ஜெபக் குறைவுகளை விட்டுவிட்டு, அனுதினமும் அவருடைய பாதத்தில் காத்திருந்து ஜெபிக்க நம்மை அர்ப்பணிப்போம். அப்பொழுது நீங்கள் ஜெபத்திலே எவைகளை எல்லாம் கேட்பீர்களோ, அவைகளை எல்லாம் பெற்று, இந்த உலகில் வாழ்ந்து, சுகித்திருப்பீர்கள் (மத்தேயு 21:22). உங்கள் குறைவுகளும், தரித்திரங்களும் மாறிப்போகும் (பிலிப்பியர் 4:19). தொடர்ந்து ஜெபியுங்கள். அற்புதங்களைப் பெற்று மகிழுங்கள்.

ஆண்டவர் தாமே உங்கள் வாழ்வில் பெரிய காரியங்களைச் செய்வாராக, ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

(T. STEPHEN)

ஸ்தாபகர், தேவனின் அன்பு ஊழியங்கள்

செப்டம்பர் மாத
மங்கள வார்த்தை

நிலைபெயராத சமாதானம்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனதருமை சகோதர – சகோதரிகளே,

நம்மை சிருஷ்டித்தவரும், நம்மை உண்டாக்கினவரும், நம்மை ஒருபோதும் மறந்து போகாதவருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

செப்டம்பர் மாத மங்கள வார்த்தை இ-பத்திரிகையின் மூலமாக உங்கள் ஒவ்வொருவரையும் சந்திப்பதில் அடிமை மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த 8 மாதங்கள் கர்த்தர் நம்மை கண்ணின்மணி போல பாதுகாத்தார். அதற்காக அவருக்குக் கோடி நன்றிபலிகளை ஏறெடுக்கிறேன் (சங்கீதம் 9:1,2).

இந்த நாளிலும் ஆண்டவருடைய பாத படியில் அமர்ந்து, ஆண்டவரே இந்த செப்டம்பர் மாதத்தில், என் பிள்ளைகளை என்ன மங்கள வார்த்தை சொல்லி ஆசீர்வதிக்க பரலோகம் சித்தம் வைத்திருக்கிறது? என்று இந்த அடிமை தேவ சமூகத்தில் கண்ணீரோடு காத்திருந்தபோது, அவர் உங்களுக்குக் கொடுத்த மங்கள வார்த்தை, ஏசாயா 54:10,

"மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா 54:10).

ஆண்டவர் இந்த மாதத்திலே உங்களுக்கு சொல்லுகிற நல்ல செய்தி, "**நிலைபெயராத சமாதானம்**". கடந்த காலங்களில் உங்கள் குடும்பத்தில் எதிர்பார்த்து, கிடைக்காத, நிலைபெயராத தமது சமாதானத்தை கர்த்தர் இந்த மாதத்திலே உங்களுக்குக் கொடுத்து, உங்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல்லுகிறார். இந்த மாதத்தில் ஆண்டவர் புதுப்புது வழிகளைத் திறந்து, உங்கள் பிரச்சனைகள் யாவற்றிற்கும் ஒரு முடிவை ஏற்படுத்தி, உங்களை மகிழ்விக்கப்போகிறார். எந்த ஜனங்கள் மத்தியில், நீங்கள் வெட்கப்பட்டு, தலைகுனிந்து நின்றீர்களோ அதே ஜனங்கள் மத்தியில் உங்கள் பேரைப் பெருமைப்படுத்தப் போகிறார்.

சமாதானமின்மை எப்படி ஒரு குடும்பத்தை பாதிக்கிறது? என்பதை ஆராய்ந்தபோது, என் பிள்ளைகளுடைய சமாதானம் இனி குலைந்து போகக் கூடாது. சமாதான காரணர் யேகோவா ஷாலோம் என் பிள்ளைகளின் வாழ்க்கையில் 24 மணி நேரமும் நிரந்தரமாய் தங்கியிருக்க வேண்டும் என்று வேண்டுதல் செய்தேன்.

"சமாதான வழியை அறியார்கள்; அவர்கள் நடைகளில் நியாயமில்லை; தங்கள் பாதைகளைத்தாங்களே கோணலாக்கிக்கொண்டார்கள்; அவைகளில் நடக்கிற ஒருவனும் சமாதானத்தை அறியான்" (ஏசாயா 59:8).

என்ற வேத வசனத்தின்படி, இந்த நிலைபெயராத சமாதானம் எனக்கு வேண்டும் என்று சொல்லும் கர்த்தருடைய பிள்ளைகள், கீழ்க்கண்ட மூன்று வழிகளை பின்பற்ற வேண்டும்.

சமாதானத்தின் வழியை அறிந்துகொள்ள வேண்டும்

முதலாவது, சமாதானத்தின் வழி, இன்னதென்று தேவனுடைய பிள்ளைகள் அறிந்துகொள்ள வேண்டும். அது என்னவென்றால், சமாதானத்தின் தேவன் யேகோவா ஷாலோம் எப்பொழுதும் உங்களோடு நிரந்தரமாய் தங்கியிருக்க வேண்டும். உங்கள் பிள்ளைகளும் சமாதானத்தின் வழியில் நடந்து, அவருடைய நிழலுக்குக் கீழ் தங்கியிருக்க, தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்பொழுது உங்கள் பிள்ளைகளின் சமாதானம் பெரிதாயிருக்கும் (ஏசாயா 54:13).

மேலும் வேத வசனத்தை நீங்கள் வாசிக்கும்போதுகூட, தேவனுடைய வார்த்தைகள் உங்களுக்கு சமாதானத்தை கொண்டுவரும். ஆண்டவருடைய வார்த்தை மட்டும் எனக்குக் கிடைக்காவிட்டால் நான் துக்கத்தில் என்றோ அழிந்துபோயிருப்பேன் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான் (சங்கீதம் 119:92). எனவே நீங்கள் சமாதானத்தின் வழியை அறிந்துகொள்ள, வேதத்தைக் கருத்தாய் வாசித்து தியானிக்கப் பழகிக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் இக்கட்டான சூழ்நிலைகளில், இந்த வசனங்கள் உங்களுக்கு ஆறுதலை, சமாதானத்தின் வழியை கொடுத்து, உங்களை நிலைநிறுத்தும். நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள்.

தங்கள் நடக்கைகளில் நியாயம் இருக்க வேண்டும்

இரண்டாவது, உங்கள் நடக்கையில் நியாயம் இருக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை, அவருடைய வழிகளை அறியாதவன், தன் வழிகளில் தாறுமாறாக நடக்கிறான். தேவனுடைய பிள்ளைகள் எப்பொழுதும் நியாயத்திற்குக் கட்டுப்பட்டு, வாழ்கிறவர்களாய் இருக்க வேண்டும். நீங்கள் வேதத்தை வாசித்து, தியானிக்கும்போதும் கூட விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப் பற்றிய உபதேசத்தை அறிந்துகொள்ளுவீர்கள் (நீதிமொழிகள் 1:3).

சில வருடங்களுக்கு முன், நெருங்கிய உறவினர் ஒருவர், "எங்கள் வீட்டில் நாங்கள் 3 சகோதரர்கள். குடும்ப சொத்தைப் பிரிப்பதில் எங்களுக்குள் பிரச்சனைகள் வந்துகொண்டே இருக்கிறது. தயவு செய்து எங்களுக்கு உதவி செய்யுகள்" என்று சொன்னார். நியாயப்படி, எங்கள் ஊரில், இளையவன் தான் முதல் பங்கை எடுக்க வேண்டும். இக்காரியத்திற்காக நான் ஜெபித்தபோது, "எல்லாரும் தங்கள் பங்கை எடுத்தபின், இளையவன் கடைசியாக தன் பங்கை எடுக்க வேண்டும்" என்று ஆண்டவர் வெளிப்படுத்தினார். அதுபோல இளையவன் எல்லாராலும் ஒதுக்கப்பட்ட, தள்ளப்பட்ட, ஒரு வருமானமும் இல்லாத இடத்தை கடைசியாக எடுத்துக்கொண்டார்.

நாட்கள் கடந்தன. அடுத்த 3 மாதங்களுக்குள், அந்த இளைய மகனின் நிலத்தின் அருகில், ஒரு தேசிய நெடுஞ்சாலையை ஆண்டவர் கொண்டு வந்தார். எல்லாராலும் ஒதுக்கப்பட்ட அவனுடைய சொத்து, அவன் உடன் பிறந்தோரின் சொத்தைக் காட்டிலும் பல மடங்கு உயர்ந்தது. ஆம் நீங்கள் நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும்போது, உங்களை தூக்கிவிட வேண்டிய பொறுப்பு, கர்த்தருடையதாகிவிடுகிறது. எனவே, தேவனுடைய பிள்ளைகள் எப்பொழுதும் நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க உங்களை அர்ப்பணியுங்கள். ஏற்ற வேளை வரும், ஆண்டவர் உங்களை தூக்கி விடுவார்.

கோணலான வழிகள் மாற வேண்டும்

மூன்றாவதாக, உங்கள் கோணலான, மாறுபாடான வழிகள் மாற வேண்டும். கோணலும், மாறுபாடான வழிகளில் நடக்கும்போது, நீங்கள் ஒருவேளை பாதைமாறி சென்றுவிடக் கூடும். அது உங்கள் சமாதானத்தைக் கெடுத்துவிடும். எனவே, உங்கள் வாழ்க்கையில் இருக்கும் கரடு முரடுகள், கீழ்ப்படியாமை எல்லாவற்றையும் இன்றைக்கு ஆண்டவரிடம் அறிக்கையிடுங்கள். சிலர், தங்கள் வழிகளை, அவர்களே கெடுத்துக்கொள்ளுவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு சமாதானம் இல்லை (சங்கீதம் 125:5). ஆம் கர்த்தருடைய வழிகளில் நீங்கள் நடக்கும்போது, உங்கள் வாழ்விலுள்ள பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடு முரடானவைச் சமமாக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசாயா 40:4).

இன்றைக்கு குடிப்பழக்கத்தில், தவறான கெட்டப் பழக்கங்களில் இருப்பவர்கள் எல்லாரும் மனம் திரும்ப வேண்டும். இந்த 3 காரியங்களையும் நீங்கள் கடைபிடிக்கும்போது, யேகோவா ஷாலோம் சமாதானத்தின் தேவன் உங்கள் வீடுகளிலே இறங்கி உலாவுவார். நிலைபெயராத சமாதானத்தை உங்களுக்குக் கொடுத்து, உங்களை உயர்த்தி அழகு பார்ப்பார்.

இந்த மாதத்தில், ஆண்டவர் என்னென்ன காரியங்களில் உங்களுக்குத் தமது சமாதானத்தைக் கொடுக்கப் போகிறார் என்பதை சுருக்கமாக தியானித்து, ஜெபத்திற்குள் கடந்து செல்வோம்:

1) குடும்ப சண்டைகளின் மத்தியில் சமாதானம்

இன்றைக்கு அநேக குடும்பங்களிலே கணவன் மனைவியிடம் பேசுவதில்லை, மனைவி, கணவனிடம் பேசுவதில்லை, பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடம் பேசுவதில்லை. இப்படி குடும்பத்தில் எப்பொழுதும் சண்டைகள் நடந்துகொண்டே இருக்கிறது. இந்த மாதத்தில் ஆண்டவர் இந்த குடும்ப சண்டைகள் மத்தியில் உங்களுக்குச் சமாதானத்தைக் கொடுப்பேன் என்று சொல்லுகிறார். இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களைப் பார்த்து நீங்கள் ஊழியத்தினிமித்தம் ஒரு வீட்டிற்குள் பிரவேசித்த உடனே, "அந்த வீட்டிற்கு சமாதானம் உண்டாவதாக என்று சொல்லுங்கள். சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பி வரும்" என்று கற்றுக்கொடுத்தார் (லூக்கா 10:5,6). வேதம் சொல்லுகிறது:

"என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்" (ஏசாயா 32:18).

ஆம் உங்கள் வீடு, சண்டை சச்சரவுகள் இல்லாமல், எப்பொழுதும் சமாதானமான தாபரமாயிருக்க வேண்டும் என்பது ஆண்டவருடைய விருப்பம். உங்கள் வீட்டை, உங்கள் குடும்பத்தை ஆண்டவர் சமாதானத்தின் கோட்டையாக இன்று மாற்றுகிறார்.

ஊழியத்தினிமித்தம் ஒருமுறை இயேசு கிறிஸ்துவும், அவரது சீடர்களும் கப்பர்நகூமுக்குச் சென்றிருந்தார்கள். இயேசு கிறிஸ்து முன்னால் நடந்து செல்ல, சீடர்கள் யாவரும் பின்னால் நடந்து வந்தார்கள். இந்த வேளையில் சீடர்களுக்குள் யார் பெரியவன்? என்கிற தர்க்கம் உண்டாயிற்று. வேதம் சொல்லுகிறது:

"அவர் கப்பர்நகூமுக்கு வந்து, வீட்டிலே இருக்கும்போது, அவர்களை நோக்கி: நீங்கள் வழியிலே எதைக்குறித்து உங்களுக்குள்ளே தர்க்கம்பண்ணினீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் பேசாமல் இருந்தார்கள்; ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று வழியில் தர்க்கம்பண்ணினார்கள்" (மாற்கு 9:33,34).

சீடர்களுக்குள் நடந்த தர்க்கத்தை ஆண்டவர் கவனித்துக்கொண்டே இருந்தார். அதுபோல இன்றைக்கு உங்கள் குடும்பத்திலிருக்கிற எல்லா தர்க்கங்களையும், வாக்குவாதத்தின் ஆவிகளையும் அவர் கவனித்துக்கொண்டே இருக்கிறார். அவைகளை எல்லாம் வெளியேற்றி, ஆண்டவர் தமது பூரண சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொடுக்கப்போகிறார். ஏனென்றால் அவர் சமாதானத்தின் தேவன் (யோவான் 14:27).

ஒருமுறை என் கணவன் முரட்டாட்டமுள்ளவராய் இருக்கிறார் என்று ஒரு மகள் தன் கணவரோடு என்னைப் பார்த்து ஜெபிக்க வந்திருந்தாள். அவளுடைய கணவர் ஊழியர்களைக் குறித்து தவறாகப் பேசுகிறவர். ஆகவே, எல்லா ஊழியர்களையும் நீங்கள் தவறாக நினைக்காதீர்கள். ஸ்டீபன் ஜயாவிடம் ஜெபிக்க வாருங்கள் என்று அழைத்து வந்தாள். அந்த மகள், தன் கணவரைக் குறித்து அடுக்கடுக்காக குற்றங்களை சுமத்தினார்கள். ஜெபத்தோடு அந்த மகளின் கணவரை ஒரு கையால் அணைத்துக்கொண்டு, நன்றாக இருக்கின்றீர்களா அண்ணே? வியாபாரம் நன்றாக நடக்கிறதா? எப்படி இருக்கின்றீர்கள்? என்று கேட்டேன். அவ்வளவுதான், உடனே அவர் மடமடவென்று அழுதுவிட்டார். எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றி கூறுங்கள் என்றேன். உடனே அவர் என் மனிதிலிருப்பதை இறக்கி வைக்க எனக்கும் ஒரு வாய்ப்பு கொடுத்தீர்களே, உங்களுக்கு நன்றி என்றார்.

எங்கள் குடும்பத்தில் நடக்கும் சண்டைகளுக்கும், சமாதானக் குறைவுகளுக்கும் காரணம், என் மனைவியின் கர்வமும், ஆணவமும் தான் என்பதை என்னிடம் சொன்னார். நான் அவர்கள் இருவருக்காகவும் ஜெபித்து, தகுந்த ஆலோசனைகளை கொடுத்து, அவர்களை ஆசீர்வதித்து அனுப்பி வைத்தேன். மறுபடியும் அந்த மகள் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" கூடுகைக்கு வந்தபோது, இப்பொழுது உங்கள் கணவர் எப்படி இருக்கிறார்? என்று நான் கேட்டேன். உங்களிடம் ஜெபித்த பின், எங்களுக்குள் இருந்த எல்லா கருத்து வேறுபாடுகளும் மறைந்துவிட்டது. இப்பொழுது நாங்கள் ஆசீர்வாதமாயிருக்கிறோம் என்று கூறினாள்.

இன்றைக்கு உங்கள் குடும்பத்தில் இருக்கும் சண்டை, சச்சரவுகள் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்றால், உங்கள் கர்வம், அகங்காரம் எல்லாம் மாற வேண்டும். ஒருவரையொருவர் மன்னிக்க வேண்டும். நீ பெரியவன், நான் பெரியவன் என்ற வேறுபாடுகள் எல்லாம் மறைய வேண்டும். இப்படிப்பட்ட தர்க்கத்தை நீங்கள் விடும்போது, உங்கள்

குடும்பத்தில் சமாதானம் நிலைநிறுத்தப்படும். கவலைப்படாதிருங்கள்.

2) அடைக்கப்பட்ட வாசல்கள் மத்தியில் சமாதானம்

ஒரு மனிதனின் வாழ்வில், எல்லா பக்கமும் வாசல் அடைபட்டுவிட்டதென்றால், சமாதானம் தானாக பறிபோய்விடும். இந்த மனநிலையிலிருப்பவர்கள், எல்லா வாசல்களும் அடைக்கப்பட்டுவிட்டதே? நான் அடுத்து என்ன செய்வேன்? என்று மன அழுத்தத்திலிருப்பார்கள் (Depression). இப்படி அடைக்கப்பட்ட வாசல்கள் மத்தியில், இருக்கும் உங்களுக்கு சமாதானத்தைக் கொடுப்பேன் என்று சொல்லுகிறார். வேதம் சொல்லுகிறது:

"மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டிற்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்" (யோவான் 20:26).

இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்த பின்னர், சீடர்கள் எல்லாரும் யூதர்களுக்குப் பயந்து, மன அழுத்தத்தில், கதவைப் பூட்டிக்கொண்டு, ஒரு வீட்டிற்குள் உட்கார்ந்திருந்தார்கள். அந்தப் பூட்டப்பட்ட வீட்டிற்குள் இயேசு வந்தார். அவருடைய சீடன் தோமாவைப் பார்த்து, "நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார், உன் கையை நீட்டி, என் விலாவிலேபோடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்றார். இப்படி பூட்டப்பட்ட வீட்டிற்குள் தம்மை வெளிப்படுத்தி, தமது நிலைபெயராத சமாதானத்தை சீடர்களுக்குக் கொடுத்தார்.

இன்றைக்கு வேலை என்ற வாசல், படிப்பு என்ற வாசல், திருமணம் என்ற வாசல், கர்ப்பத்தின் கனி என்ற வாசல் உங்களுக்கு மூடியிருக்கலாம். எது மூடியிருந்தாலும் திறக்கிற ஆண்டவர் இன்றைக்கு உங்கள் மத்தியில் வந்திருக்கிறார். அவர், ஒருவரும் பூட்டக்கூடாதபடி திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக் கூடாதபடி பூட்டுகிறவருமாகிய தாவீதின் திறவுகோலை உடையவர் (வெளிப்படுத்தல் 3:7). வேதம் சொல்லுகிறது:



"...இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" (வெளிப்படுத்தல் 3:8).

யாக்கோபுக்கும், ராகேலுக்கும் குழந்தை பாக்கியம் இல்லை. இதனால் அவர்களுக்குள் சண்டை வந்துகொண்டே இருந்தது. ராகேல் தன் கணவரிடம், "எனக்குப் பிள்ளை கொடும். இல்லாவிட்டால் நான் சாகப்போகிறேன்" என்றாள். யாக்கோபு ஒரு நாள் அந்த ரகசியத்தை உடைத்தார். "நானா உன் கர்ப்பத்தை அடைத்து வைத்திருக்கிறேன், தேவனல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்து வைத்திருக்கிறார்" என்றான். வேதம் சொல்லுகிறது:

"எனக்குப் பிள்ளைகொடும், இல்லாவிடடால் நான் சாகிறேன் என்றாள். அப்பொழுது யாக்கோபு ராகேல்மேல் கோபங்கொண்டு: தேவனல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார், நான் தேவனா? என்றான்" (ஆதியாகமம் 30:1,2).

இப்படி யாக்கோபு, ராகேலிடம் சொன்ன பிறகு, ராகேல் தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ண ஆரம்பித்தாள். ஆண்டவர் அவளுடைய ஜெபத்தைக் கேட்டு, அவளுக்குக் குழந்தை பாக்கியத்தைக் கொடுத்தார் (ஆதியாகமம் 30:22).

ஒரு முறை, நாகர்கோவில் ஜெப கோபுரத்திற்கு ஊழியத்தினிமித்தம் நான் சென்றிருந்தேன். இந்த நேரத்தில் என் சித்தப்பா மகளின் வீடு பிரதிஷ்டையும் இருந்தது. ஆனால் என்னால் இரவு 1.00 மணிக்கு மேல் தான் அங்கு செல்ல முடிந்தது. அங்கும் ஒரு கணவனும், மனைவியும், 10

வருடங்களாக குழந்தை பாக்கியம் இன்றி, என்னைப் பார்த்து ஜெபிக்க காத்திருந்தார்கள். முதலாவதாக, அவர்களை ஒரு அறைக்குள் அழைத்துச் சென்று, அவர்களுக்காக ஜெபித்து, தேவ ஆலோசனைகளை வழங்கினேன். அவள் கணவன், "இவளை திருமணம் முடித்த பிறகு தான் எனக்குக் கடன் பிரச்சனை, முதுகு வலி, கஷ்டம் எல்லாம் வந்தது என்று எல்லாப் பழியையும் மனைவியின் மீது சுமத்தினான். நான் அவரிடம், "சரி அவளைத் திருமணம் முடித்த பிறகு தான் இவ்வளவு கஷ்டம் என்று சொல்லுகின்றீர்கள்? திருமணத்திற்கு முன் உழைத்து, எதை சேர்த்து வைத்துள்ளீர்கள்?" என்றேன். அவரால் பதில் சொல்ல இயலவில்லை.

மேலும் 10 வருடங்களாக குழந்தை இல்லை என்று சொல்லுகிறீர்கள். ஆனால் உங்கள் மனைவியை வீட்டில், அடி அடியென்று அடித்து, துடிதுடிக்க வைத்திருக்கின்றீர்கள். நீங்கள் இப்படி இருந்தால், உங்களுக்கு எப்படி ஆண்டவர் ஒரு குழந்தையை கொடுப்பார்? என்றேன். அவர் கதறி அழுது, தன்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தார். "ஆண்டவரே, என் பிள்ளை இப்பொழுது மனம் திரும்பிவிட்டான். நீர் தான் இவர்களின் அடைக்கப்பட்ட கர்ப்பத்தை திறக்க வேண்டும். அடுத்த முறை என் பிள்ளைகளைப் பார்க்கும்போது, நீர் அவர்கள் இருவரையும் ஆசீர்வதித்திருக்க வேண்டும்" என்று ஜெபித்தேன். நாட்கள் கடந்தன. ஒரு வருடத்திற்குள் ஆண்டவர் அவர்களுக்கு ஒரு குழந்தையை கொடுத்து, அவர்களை ஆசீர்வதித்தார். அல்லேலூயா.

குழந்தை இல்லாமலிருந்த காரணத்தை யாக்கோபு, ராகேலிடம் சுட்டிக்காட்டின உடனே, அவள் சண்டை போடுவதை விட்டுவிட்டு, ஆண்டவரை இறுகப் பிடித்துக்கொண்டாள். அதைத்தான் நீங்களும் செய்ய வேண்டுமே தவிர, ஒருவரையொருவர் குற்றம் சுமத்தவே கூடாது. அப்பொழுது அடைக்கப்பட்ட வாசல் உங்களுக்கு தானாக திறக்கும். மனம் கலங்காதிருங்கள்.

3) வியாதிப் படுக்கையின் மத்தியில் சமாதானம்

"அவர் அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடேபோய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்" (மாற்கு 5:34)

12 வருடம் பெரும்பாடுள்ள ஸ்திரீ, இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டால் போதும், சுகம் கிடைக்கும் என்று நம்பி, அவரது வஸ்திரத்தின் விளிம்பைத் தொட்டாள். இயேசு கிறிஸ்துவிடமிருந்து ஒரு வல்லமை புறப்பட்டுச் சென்றது. அப்பொழுது இயேசு என்னை தொட்டது யார்? என்று கேட்டார். உடனே அந்த ஸ்திரீயானவள் பயந்து, நடுங்கி, உண்மையை அவருக்குச் சொன்னாள். உடனே இயேசு அவளைப் பார்த்து, மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடேபோய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார். அந்த நிமிடமே அவள் பூரண சுகமடைந்தாள். அதுபோல இந்த இ-பத்திரிகையை நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கும்போதே உங்கள் சரீரத்திலுள்ள வியாதிகள், பெலவீனங்கள் சுகமடைவதை நான் என் ஆவிக்குரிய கண்களில் பார்க்கிறேன்.

எனக்குப் பெலனில்லை, சுகமில்லை, ஆரோக்கியம் இல்லை, தீராத வியாதியிலே இருக்கிறேன் என்று அழுதுகொண்டு இருக்கிறீர்களா? இன்றைக்கு நீங்கள் ஆண்டவரின் வழி இன்னதொன்று அறிந்து, கோணலான வழிகளை விட்டு, மனம் திரும்பி, உங்கள் நடக்கைகளில் நியாயமுள்ளவர்களாய் இருக்க உங்களை அர்ப்பணியுங்கள். அப்பொழுது ஆண்டவர் உங்களுக்குத் தமது நிலைபெயராத சமாதானத்தைக் கொடுத்து, உங்கள் சரீரத்திலுள்ள சகல வியாதிகளையும் குணமாக்கி, ஜீவனையும், தீர்க்காயுசையும் கொடுப்பார் (ஏசாயா 53:5). நீங்கள் வாழ்ந்து, சுகித்திருப்பீர்கள். இந்த ஆசீர்வாதங்களை எல்லாம் இன்று நான் உங்கள் சிரசின் மேல் வைத்து ஆசீர்வதிக்கிறேன்.

தேவ சமாதானம் உங்களோடு இருப்பதாக, ஆமென்.

பிறந்த நாள் மற்றும் திருமண நாள்

வாழ்த்துக்கள்!

செப்டம்பர் மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் யாவருக்கும் தேவனின் அன்பு ஊழியங்களின் சார்பாகவும், எங்கள் குடும்பத்தின் சார்பாகவும் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்!

"கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்" (ஆதியாகமம் 26:12).

என்ற மங்கள வாக்கின்படி, ஆண்டவர் தாமே உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

நீ விலையேறப்பெற்றவள்!

சகோதரி **ஜோஸ்பின் ஸ்டீபன்,**
தேவனின் அன்பு ஊழியங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் இந்த செப்டம்பர் மாதத்திற்குள் பிரவேசித்திருக்கும் உங்கள் யாவரையும் நான் வாழ்த்துகிறேன், ஆசீர்வதிக்கிறேன்.

செப்டம்பர் 5-ஆம் தேதி ஆசிரியர் தினமாகும். நம்மை உருவாக்கிய ஆசிரிய பெருமக்களுக்கு நமது வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவிப்போம். இது வரையிலும் தேவன் நம்மை கண்ணின் மணிபோல பாதுகாத்து நடத்தி வந்திருக்கிறார். உலகத்திலுள்ளவர்கள் பார்வைக்கு நாம் ஒருவேளை அற்பமானவர்களாய் தெரியலாம். ஆனால் கர்த்தருடைய பார்வையில் நாம் அருமையானவர்கள். எனவே தான் அவர் சொல்லுகிறார்:

"நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்குஈடாக ஜனங்களையும்கொடுப்பேன்" (ஏசாயா 43:4).

அவர் நம்மைப் பார்த்து மகனே, மகளே நீ என் பார்வையிலே விலையேறப்பெற்றவள், விலையேறப்பேற்றவன். எனவே தான் நான் உன்னை இவ்வளவு நாட்களும் சிநேகித்து, காத்து வருகிறேன். என்னுடைய கரங்களிலே உன்னை அலங்கார கிரீடமாகவும் ராஜமுடியுமாக வைத்திருக்கிறேன். இந்த பூமியிலே ஒரு கனமுள்ள பாத்திரமாய் அவரவர் வகிக்கிற ஸ்தானத்திலே வைத்திருக்கிறேன். இதனால் அநேகர் தங்களைத் தாங்களே தாழ்த்திக்கொண்டு, குறைவாக எண்ணிக்கொள்ளுகிறார்கள். இதனால் சோர்வுகள் வருகிறது. சிலருக்கு அவர்கள் சம்பாதித்த பணம், படித்த படிப்பு, பெற்ற பிள்ளைகள் விலையேறப்பேற்றதாய் இருக்கும். ஆனால் வேதத்திலே சாலொமோன் ஞானிக்கு, ஞானமே விலையேறப்பெற்றதாய் இருந்தது. நம்மைக் குறித்து ஆண்டவர் எவ்வளவு மேன்மையான உயர்வான திட்டங்கள் வைத்திருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடுகிறோம். அவருடைய விலையேறப்பெற்ற அன்பை மறந்து ஏதேதோ காரியங்களில் ஈடுபட்டு, நம்மையே நாம் குறைவுபடுத்திக்கொள்கிறோம். நாம் விலையேறப்பெற்றவர்களாய் மாறும்படியாக அவர் தம்முடைய விலையேறப்பெற்ற ரத்தத்தையே தியாகமாக, சிலுவையில் சிந்தியிருக்கிறார். என்னே அவருடைய அன்பு பாருங்கள்.

வேதத்திலே என்னென்ன காரியங்கள் விலையேறப்பெற்றதாய் இருக்கிறது என்பதை இந்த மாதத்தில் தியானிப்போமா!

1) ஆத்துமா விலையேறப்பெற்றது

"மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மாற்கு 8:36,37).

கர்த்தர் நம்முடைய பணத்தையோ, படிப்பையோ, அழகையோ அல்ல ஆத்துமாவை விலையேறப்பெற்றதாய் பார்க்கிறார். சரீரம் அழிந்துபோகும். ஆனால் ஆத்துமாவோ ஒருபோதும் அழியாது. எனவே தான், "பிரியமானவனே, உன்

ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு" என்று பவுலடிகள் வாழ்த்துகிறார். சிலர் ஆத்துமாவின் மேன்மை தெரியாமல் ஆத்தும மீட்பை இழந்துபோகின்றனர். சிம்சோனைக் குறித்து பாருங்கள், தன்னுடைய ஆத்துமாவின் மதிப்பு தெரியாமல், தெலீலாளிடம் பாவத்தில் விழுந்து, எல்லாவற்றையும் இழந்து நின்றான். ஆவியானவரும் அவரைவிட்டு விலகினார். மற்றவர்கள் பார்வைக்கு கேலிப்பொருளாக, பரியாசப்பொருளாக மாறினான்.

ஆம் எனக்கன்பானவர்களே, நம்முடைய ஆத்துமா விலையேறப்பெற்றது. ஆண்டவர் நம்முடைய ஆத்துமாவை உளையான சேற்றிலிருந்து தூக்கி எடுக்கும்படி தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினாரல்லவா? அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் ஐசுவரியவானாகும்படி நம் நிமித்தம் தரித்திரரானாரல்லவா (2 கொரிந்தியர் 8:9). எவ்வளவு அன்பு பாருங்கள். எனவே, ஆத்துமாவை நஷ்டப்படுத்தாதிருங்கள். அது மிகவும் விலையேறப்பெற்றது.

2) வாக்குத்தத்தம்
விலையேறப்பெற்றது

"இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, தெய்வீக சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2 பேதுரு 1:4).

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் விலையேறப்பெற்றவை, கிருபை பொருந்தியவை. வானமும், பூமியும் ஒழிந்துபோனாலும், அவருடைய வார்த்தைகள் ஒருபோதும் ஒழிந்துபோவதில்லை. அவைகள் பொன்னிலும் மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும், தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது (சங்கீதம் 19:10). வேதத்திலுள்ள வாக்குத்தத்தங்கள் எல்லாம் நமக்கு தான் சொந்தம். கர்த்தர் என்னை பெலப்படுத்துகிறவர் என்பது ஒரு விலையேறப்பெற்ற வாக்குத்தத்தம். அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் என்பது ஒரு விலையேறப்பெற்ற வாக்குத்தத்தம் (ஏசாயா 53:5). என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவீர்கள் என்பது ஒரு வாக்குத்தத்தம் (மாற்கு 16:17). ஆபிரகாம் லிங்கன் தன் சிறு வயது முதலே பாட்டியின் சொல்லைக்கேட்டு வேத புத்தகத்தை விரும்பி வாசித்தபடியால் தான், அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனாதிபதியாக பிற்காலத்தில் மாற முடிந்தது. ஏன் நம்முடைய வாழ்க்கையிலும் கூட நாம் சோர்வுகளுக்குள்ளாக கடந்து செல்லும்போது, நாம் படிக்கிற, நாம் பார்க்கிற வேத வசனங்கள் எவ்வளவு விலையேறப்பெற்றதாய் இருந்து, விலையேறப்பெற்ற காரியங்களை நடப்பிக்கிறது. எனவே, அவருடைய வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொண்டு, வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல பழகிக்கொள்ளுங்கள்.

3) விசுவாசம்
விலையேறப்பெற்றது

"நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு..." (2 பேதுரு 1:1).

இந்த வசனம் ஆங்கில வேதாகமத்தில் விலையேறப்பெற்ற விசுவாசம் என்று எழுதப்பட்டிருக்கிறது. விசுவாசம் என்பது தேவனிடத்திலிருந்து எல்லாவற்றையும் பெற்றுத் தருவது. விசுவாசத்தினால் தான் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்கிறோம். விசுவாசத்தின் மூலம் தான் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்கிறோம். விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். விசுவாசமுள்ளவர்கள் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும், பயப்படமாட்டார்கள். வேத வசனங்களை வாசிக்க வாசிக்கதான் விசுவாசம் நமக்குள் வளருகிறது. சாத்தான் யோபுவின் விலையேறப்பெற்ற விசுவாசத்தை குலைக்கப் பார்த்தான். வியாதியைக் கொடுத்தான், ஆஸ்தியை அழித்தான், பிள்ளைகளை கொன்றான். ஆனாலும் யோபு தன் விசுவாசத்திலிருந்து பின்வாங்கவில்லை. சாத்தானுடைய தந்திரங்கள் முறியடிக்கப்பட்டது. முடிவில் யோபுவை ஆண்டவர் இரட்டத்தனையாக ஆசீர்வதித்தார் (யோபு 42:10). நாமும் விசுவாசத்தில் உறுதியாயிருந்து, மேன்மையான வாழ்வை பெற்று, விலையேறப்பெற்றவனாய், விலையேறப் பெற்றவளாய் வாழ முயற்சிப்போமா!

ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

ஜெபம்

அன்பின் பரலோகப் பிதாவே, இந்த பெண்கள் பகுதியை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் ஆத்துமா விலையேறப்பெற்றது, வாக்குத்தத்தம் விலையேறப்பெற்றது, விசுவாசம் விலையேறப்பெற்றது என்பதை கற்றுக்கொடுத்தீரே உமக்கு ஸ்தோத்திரம். நீர் இவர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை இவர்கள் இறுகப் பிடித்துக்கொண்டு, உம்மில் நிலைத்திருந்து, ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள கிருபை தாரும். இவர்கள் உபத்திரவ நேரங்களில், வியாதியின் நேரங்களில் யோபுவைப்போல பொறுமையாய் காத்திருந்து, இரண்டத்தனையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளட்டும். ஒவ்வொரு நாளும் வேத வசனங்களை கருத்தாய் வாசித்து, அதன்படி நடந்துகொள்ள கிருபை செய்யும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே, ஆமென்.

வேத வினா போட்டி-39

செப்டம்பர் மாத கேள்விகள்

சாக்குப்போக்கு சொன்னவர்கள் யார்?

(விடைகள் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும்)

1) நான் வாக்கு வல்லவன் அல்ல. திக்கு வாயும், மந்த நாவும் உள்ளவன்.
2) இதோ நான் பேச அறியேன், சிறு பிள்ளையாய் இருக்கிறேன்.
3) ஜனங்களின் கட்டாயத்தினிமித்தம் இந்தப் பொன் உடைமைகளை அக்கினியில் போட்டேன். அதிலிருந்து கன்றுக்குட்டி வந்தது.
4) மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது. என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன்.
5) நான் என் ஊரிலே மரித்து, என் தாய் தகப்பன்மார் கல்லறையிலே அடக்கம்பண்ணும்படிக்குப் போகிறேன்.
6) வெளியே சிங்கம், வீதியிலே கொலையுண்டேன்.
7) தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நான் புசித்தேன்.
8) ஜனங்கள் ஆடுமாடுகளில் நலமானவைகளை, உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படி தப்ப வைத்திருக்கிறார்கள்.
9) ஆண்டவரே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன்.
10) பெண்ணை விவாகம்பண்ணினேன். அதனால் நான் விருந்திற்கு வரக்கூடாது.

ஆகஸ்ட் மாத விடைகள்

1) ஆக்கினிமயமான நாவு (அப்போஸ்தலர் 2:3).
2) மாறுபாடான நாவு (நீதிமொழிகள் 15:4).
3) கல்விமானின் நாவு (ஏசாயா 50:4).
4) கபட நாவு (சங்கீதம் 52:4).
5) ஆரோக்கியமுள்ள நாவு (நீதிமொழிகள் 15:4).
6) புரட்டு நாவு (நீதிமொழிகள் 17:20).
7) மந்த நாவு (யாத்திராகமம் 4:10).
8) பொல்லாத நாவு (சங்கீதம் 140:11).
9) புறங்கூறும் நாவு (சங்கீதம் 15:3).
10) பொய் பேசும் நாவு (நீதிமொழிகள் 6:17).

விதிமுறைகள்

1.சரியான விடை எழுதுபவர்களுக்கு, பரிசு கொடுக்கப்படும். அதிகமானவர்கள் சரியான விடை எழுதியிருந்தால், குலுக்கல் முறையில் பரிசளிக்கப்படும்.
2.விடைகள் அனைத்தும் வசன ஆதாரங்களுடன் இருக்கவேண்டும்.
3.விடைகள் ஒவ்வொரு மாதமும் 20-ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வந்து சேரவேண்டும்.

குலுக்கல் முறையில் ஆகஸ்ட் மாத பரிசை வென்றவர்கள்

1) Sis.K. ஷீபா தீனதயாளன் , விருதுநகர்
2) Sis.V. மரிய ஜெனிபா, திருநெல்வேலி

அனுப்ப வேண்டிய முகவரி

Sis.ஜோஸ்பின் ஸ்டீபன்,
தேவனின் அன்பு ஊழியங்கள்,
எண்.14, ராமலிங்க நகர், OMR ரோடு, SRP டூல்ஸ் அருகில்,
கொட்டிவாக்கம், சென்னை - 600041
தொலைபேசி : 044 - 2454 7999 || 99419 50999
Email: publications@godsloveministries.co.in
Website:www.godsloveministries.co.in

அற்புத சாட்சிகள்!

அருக்கருக்காக அற்புதங்கள்!

தனலெட்சுமி சாய் பாலாஜி,
மஸ்கட்

2013-ஆம் ஆண்டு மஸ்கட் தேசத்தில், ஒரு கல்லூரி வேலைக்கு விண்ணப்பித்து, விசாவுக்காக காத்திருந்தேன். இந்த நிலையில் ஏஞ்சல் டிவியில் சகோதரர் ஸ்டீபன் அவர்களின் தேவ செய்தியைப் பார்த்துக்கொண்டே, எனக்கு விசா விரைவில் கிடைக்க வேண்டும் என்று ஜெபித்துக் கொண்டிருந்தேன். தேவ செய்தியில், "ஒரு மகள், இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டே, விசாவுக்காக ஜெபித்துக்கொண்டிருக்கிறாள். இன்றைக்கு ஆண்டவர் அந்த விசாவை கொடுக்கிறார்" என்று சகோதரர் அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். என்ன ஆச்சரியம்! அன்று மாலை 3.00 மணிக்கே எனக்கு விசா வந்துவிட்டது. இப்படி சகோதரர் அவர்களின் ஜெபத்தினால் 2016, 2018, 2020 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில், மஸ்கட் தேசத்தில், நான் வேலை செய்த கல்லூரியில் எவ்வளவோ பிரச்சனைகள் இருந்தபோதும், ஆண்டவர் அற்புதமாய் என் விசாவை புதுப்பித்துக்கொடுத்தார். என் மகளின் திருமணத்தையும் அற்புதமாய் நடத்திக் கொடுத்தார். கர்த்தர் என் வாழ்வில் செய்த நன்மைகளுக்காக அவருக்கே மகிமை செலுத்துகிறேன். அல்லேலூயா.

கனடா செல்ல வழி செய்தார்!

இஸ்ரவேல் ராமு,
பல்லாவரம், சென்னை

என் மகன் TCS-ல் பணிபுரிந்து வருகிறான். அவன் கடந்த 3 வருடங்களாக கனடா தேசத்திற்குச் செல்ல எவ்வளவோ முயற்சித்தும், அவனால் செல்ல முடியவில்லை. இந்த வேளையில் சகோதரர் ஸ்டீபன் அவர்களை அடைக்கலப்பட்டணத்திலும், அன்பரின் பாதத்தில் ஒரு நாள் கூடுகையிலும் நேரில் பார்த்து, என் மகனுக்காக ஜெபித்துக்கொண்டேன். என்ன ஆச்சரியம்! ஆண்டவர் சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, என் மகன் கனடா தேசத்திற்குச் செல்ல கிருபை செய்தார். மேலும் என் தம்பியின் மச்சான் மகன் பிசாசின் கட்டுகளில் இருந்தான். ஜெப கோபுரத்திலிருந்து, ஜெப எண்ணெயை எடுத்துச் சென்று, அவனுக்கு குடிக்கக் கொடுத்தேன். அன்றைக்கே அவன் பரிபூரண விடுதலை பெற்றான். கர்த்தர் செய்த இந்த அற்புதத்திற்காக அவருக்கே மகிமை உண்டாகட்டும். ஜெபித்த சகோதரருக்கும் நன்றி செலுத்துகிறேன். அல்லேலூயா.

7 கட்டிகளும் மறைந்தன!

இந்த வருடம் மே மாதம் தான், "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" கூடுகையில் நான் முதன் முதலாகக் கலந்துகொண்டேன். ஜெப வேளையில் சகோதரர் அவர்கள், "உன் சரீரத்திலுள்ள பெலவீனங்களை ஆண்டவர் அகற்றுகிறார்" என்று தீர்க்கதரிசனம் உரைத்தார். என் சரீரத்தில் 7 கட்டிகள் இருந்தன. என் வலது கையை என்னால் தூக்கவே முடியாது. என்ன ஆச்சரியம். அன்பு சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, ஆண்டவர் என்னை குணமாக்கினார். நான் வீட்டிற்குச் சென்று பரிசோதனை செய்தபோது, என் கை நன்றாக இருந்தது. எனக்கிருந்த 7 கட்டிகளும் மறைந்திருந்தன. அன்பு சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு நன்றி சொல்லுகிறேன். அல்லேலூயா.

தேவி,
வேங்கைவாசல், சென்னை

திருமணம் கைகூடி வந்தது!

29 வயது வரை எனக்குத் திருமணம் ஆகாமலிருந்தது. இதனால் என் குடும்பத்தினர் மிகுந்த வேதனையோடு இருந்தார்கள். சகோதரர் ஸ்டீபன் அவர்களை நேரில் பார்த்து, ஜெபித்துக் கொண்டேன். என்ன ஆச்சரியம். கர்த்தர் அன்பு சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, இந்த வருடம் மார்ச் மாதத்தில் என் திருமணத்தை நடத்திக் கொடுத்தார். அது மட்டுமல்ல, இதே வருடத்தில் என் சகோதரிக்கும் திருமணம் முடிவாகியிருக்கிறது. சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, இரட்டிப்பான நன்மைகளை என் குடும்பத்தில் செய்த தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

மஞ்சு,
புளியந்தோப்பு, சென்னை

சொத்து விற்பனையானது!

2018-ஆம் ஆண்டிலிருந்து என் சொத்தை விற்பனை செய்ய எவ்வளவோ முயற்சி செய்தேன். எதுவுமே நடக்கவில்லை. திடீரென ஒப்பந்தம் போடுவார்கள், உடனே வேண்டாம் என்று ஒப்பந்தத்தை ரத்து செய்துவிடுவார்கள். இது எனக்கு மிகுந்த வேதனையாக இருந்தது. இந்த நிலையில் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகைக்கு வந்து, என் சொத்து விற்பனையாகிவிட்டால், இக்கூடுகையில் சாட்சி சொல்லுவேன் என்று பொருத்தனையோடு சகோதரரிடம் ஜெபித்துக்கொண்டேன். என்ன ஆச்சரியம். இந்த மாதம், அதாவது ஆகஸ்ட் 3-ஆம் தேதி, என் சொத்து விற்பனையாகி, பத்திரப் பதிவும் முடிய கர்த்தர் கிருபை செய்தார். அன்பு சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். அவருடைய நாமம் மகிமைப்படுவதாக.

ஆனந்தி,
பெங்களூர்

ஆகஸ்ட் மாத கூட்டங்களின் அறிக்கை!

கர்த்தருடைய கிருபையினாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் அன்பு சகோதரர் T. ஸ்டீபன் அவர்களை ஆகஸ்ட் மாதம் முழுவதும் நடைபெற்ற கூட்டங்களில் ஆண்டவர் வல்லமையாய் பயன்படுத்தினார். அநேக சாட்சிகளை ஆண்டவர் எழுப்பினார்.

1) ஆகஸ்ட் 5, 2023 – அன்பரின் பாதத்தில் ஒரு நாள் உபவாசக் கூடுகை, சென்னை

"அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகை, சென்னை வேப்பேரி, அனிதா மெட்ரிக்குலேஷன் பள்ளி அருகில் அமைந்துள்ள பாலர் கல்வி நிலையத்தில், ஆகஸ்ட் 5, 2023 அன்று காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை, நடைபெற்றது. ஆராதனை வேளையை சகோதரி ஸ்டெஃபி ஸ்டீபன் நடத்தினார்கள். சாட்சி வேளையை சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன் அவர்கள் நடத்தியபோது, அநேகர் காத்திருந்து, கர்த்தர் செய்த நன்மைகளைப் பகிர்ந்துகொண்டனர்.

இக்கூடுகையில் சகோதரரின் இளைய மகன் ஜெப்ஃரின் ஜோயல், தன்னுடைய முதல் தேவ செய்தியை சுருக்கமாக கீழ்க்கண்டாவறு பகிர்ந்துகொண்டார்.

"தாங்க முடியாத உபத்திரவங்களும், பாடுகளும், பிரச்சனைகளும் என்னை நெருக்குகிறதே, ஆண்டவரே இதையெல்லாம் நீர் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறீரா? என்று நம்மில் அநேகர் புலம்புகிறோம். ஆனால் ஆண்டவர் உங்களைப் பார்த்து, "நான் ஏற்ற வேளைக்காக காத்துக்கொண்டிருக்கிறேன் மகளே, மகனே" என்று சொல்லுகிறார். அந்த ஏற்ற வேளை வரும்பொழுது, இன்று கண்ட எகிப்தியனை என்றுமே காணமாட்டீர்கள். ஏற்ற வேளை வரும்போது உங்கள் பிரச்சனைகளும், பாடுகளும் மாறிப்போகும். ஆகவே, ஆண்டவருடைய வேளை வரும்வரை நீங்கள் பொறுமையாக அவருடைய பாதத்தில் காத்திருங்கள்"

இந்த தேவ செய்தி, இக்கூடுகையில் கலந்து கொண்ட அனைவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாய் இருந்தது.

மேலும் அன்பு சகோதரர் T. ஸ்டீபன் அவர்கள், "நீர் கொடுக்க நாங்கள் வாங்கிக்கொள்ளுகிறோம்" என்ற தலைப்பில் கொடுத்த மங்கள வார்த்தை, கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் மிகவும் ஆசீர்வாதமாயிருந்தது. கூட்டத்தின் முடிவில் சகோதரர் அவர்கள், யாவருக்கும் தனி ஜெபம் ஏறெடுத்தார். ஆசீர்வதிக்கப்பட்ட மதிய உணவும் பரிமாறப்பட்டது. முன்னதாக, சகோதரி ஸ்டெஃபி ஸ்டீபன் அவர்கள், சென்னை அடையார் பகுதியில் புதிதாக ஆரம்பித்துள்ள Leviticus Ed Tech என்ற நிறுவனத்திற்காக அன்பு சகோதரர் அவர்கள் சிறப்பு ஜெபம் ஏறெடுத்தார்கள்.

2) ஆகஸ்ட் 6, 2023 – ஆறுதலைத் தேடி ஒரு நாள், சென்னை

"ஆறுதலைத் தேடி ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனை, சென்னை - சோழிங்கநல்லூரில் அமைந்துள்ள சேக்ரட் ஹார்ட் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், ஆகஸ்ட் 6-ஆம் தேதி, மாலை 5.30 மணி முதல் 8.30 மணி வரை நடைபெற்றது. துதி ஆராதனை மற்றும் சாட்சி வேளையை சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன் அவர்கள் நடத்தினார்கள்.

"அன்பு சகோதரர் ஸ்டீபன் அவர்கள், "வாக்குப்பண்ணினதை நிறைவேற்ற வல்லவர்" என்ற தலைப்பில் கொடுத்த மங்கள வார்த்தை, கலந்துகொண்ட ஆத்துமாக்கள் அனைவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாய் இருந்தது. இக்கூடுகையின் முடிவில், கலந்துகொண்ட அனைவருக்கும் சகோதரர் தனி ஜெபம் ஏறெடுத்தார்.

3) ஆகஸ்ட் 8, 2023 – விண்ணப்பத்தைக் கேட்பவரே

விண்ணப்பத்தைக் கேட்பவரே" ஆன்லைன் ஜெபம், ஆகஸ்ட் 8-ஆம் தேதி காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நடைபெற்றது. அநேகர் தங்கள் விண்ணப்பத்தை ஆன்லைன் மூலம் அன்பு சகோதரரிடம் தெரிவித்து, ஜெபித்துக்கொண்டனர். இந்நிகழ்ச்சியின் மூலம் ஆண்டவர் அநேக சாட்சிகளை எழுப்பினார். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. அல்லேலூயா.

4) ஆகஸ்ட் 12, 2023 – குடும்ப ஆசீர்வாதக் கூடுகை, கோயம்புத்தூர்

கோயம்புத்தூரில் அமைந்துள்ள தேவனின் அன்பு ஜெப கோபுரத்தில் ஆகஸ்ட் 12, 2023 அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை குடும்ப ஆசீர்வாதக் கூடுகை நடைபெற்றது. இக்கூட்டத்தில் சகோதரர் ஸ்டீபன் அவர்கள் தேவ செய்தியை பகிர்ந்து கொண்டார்கள். இக்கூடுகையில் பங்குபெற்ற அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டனர். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

5) ஆகஸ்ட் 15, 2023 – வியாபாரம் மற்றும் தொழில் முனைவோருக்கான சிறப்புக் கூடுகை, சென்னை

வியாபாரம் மற்றும் தொழில் செய்வோருக்கான சிறப்பு ஆசீர்வாதக் கூடுகை சென்னை வேப்பேரி, அனிதா மெட்ரிக்குலேஷன் பள்ளி அருகில் அமைந்துள்ள பாலர் கல்வி நிலையத்தில், ஆகஸ்ட் 15, 2023 அன்று காலை 9.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை, நடைபெற்றது. இக்கூடுகையில் தொழில் மற்றும் வியாபாரம் செய்வோர் அநேகர் கலந்துகொண்டு, ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

ஆராதனை வேளையை போதகர் ஜஸ்டின் நடத்தினார். எப்படி ஜெபத்தோடு வியாபாரம் / தொழில் செய்ய வேண்டும்? எப்படி சமூக வலைத்தளத்தின் மூலம் எப்படி வியாபாரத்தை, தொழிலை வளர்க்க வேண்டும்? போன்ற ஆலோசனைகளை ஜெபத்துடன் சகோ. டெரில் ஸ்டீபன், சகோ. ஜெப்ஸிரின் ஜோயல், போதகர் ஜஸ்டின் ஆகியோர் வழங்கினர். ஜெப நேரத்தையும், சிறப்பு கலந்துரையாடல் நேரத்தையும் சகோதரர் ஸ்டீபன் அவர்கள் நடத்தினார்கள். "வானத்தைத் திறப்பார்" என்ற தலைப்பில் அன்பு சகோதரர் அவர்கள் கொடுத்த தேவ செய்தி, வியாபாரிகளுக்கும், தொழில் செய்வோருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாயிருந்தது. கூட்டத்தின் முடிவில் யாவருக்கும் தனி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது, ஆசீர்வதிக்கப்பட்ட மதிய உணவும் பரிமாறப்பட்டது. கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார். அல்லேலூயா.

6) ஆகஸ்ட் 18,19 & 20, 2023 – நற்செய்திப் பெருவிழா, ஆயிரந்தெங்கு, குமரி மாவட்டம்

குமரி மாவட்டம், ஆயிரந்தெங்கு – கிரீனா முந்திரி தொழிற்சாலையில் ஆகஸ்ட் 18,19 மற்றும் 20 ஆகிய மூன்று நாட்களிலும், மாலை 6.00 மணி முதல் 8.30 மணி வரை "நற்செய்திப் பெருவிழா" நடைபெற்றது. இக்கூட்டங்களில் அன்பு சகோதரர் ஸ்டீபன் அவர்களை ஆண்டவர் வல்லமையாக எடுத்து பயன்படுத்தினார். அநேகர் கலந்துகொண்டு, ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டனர். கர்த்தர் மகிமையான காரியங்களைச் செய்தருளி, தாம் இன்றைக்கும் ஜீவிக்கிறேன் என்பதை நிரூபித்தார். அல்லேலூயா.

8) ஆகஸ்ட் 25,26 & 27 2023 - துபாய் தேச ஊழியங்கள்

கர்த்தருடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் ஆகஸ்ட் 25 முதல் 27 வரை அன்பு சகோதரர் ஸ்டீபன் அவர்களை துபாய் தேசத்திற்கு அவர் கொண்டு சென்றார். ஆகஸ்ட் 25 – ஆம் தேதி மாலை 8.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், 26 – ஆம் தேதி காலை 10.00 மணி முதல் மாலை 1.00 மணி வரையிலும் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூடுகைகளிலும், 27-ஆம் தேதி காலை 8.45 மணி முதல் 11.00 மணிவரை நடைபெற்ற சிறப்பு ஞாயிறு ஆராதனையிலும் ஆண்டவர் அன்பு சகோதரரை வல்லமையாக பயன்படுத்தினார். துபாய் தேசத்தில் நடந்த இந்தக் கூட்டங்களில் அநேகர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். இக்கூட்டங்களை போதகர் ரைட்லின் அவர்கள் அருமையாக ஒழுங்கு செய்திருந்தார்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

9) 'ஷேமம்' வாராந்திர உபவாச ஜெபம்

தேவனின் அன்பு ஊழியங்கள் சார்பாக நடத்தப்படும், வாராந்திர ஷேமம் உபவாச ஜெபம், வெள்ளிக்கிழமைதோறும் காலை 11.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை, எங்களது நாகர்கோவில், மும்பை மற்றும் கோயம்புத்தூர் ஜெப கோபுரங்களில் நடத்தப்படுகிறது. ஆண்டவர் இக்கூடுகையின் மூலம் மகிமையான காரியங்களைச் செய்துவருகிறார். அநேகர் கலந்துகொண்டு, பிரச்சனைகளிலிருந்தும், பாடுகளிலிருந்தும், பிசாசின் கட்டுகளிலிருந்தும் விடுதலை அடைந்துள்ளனர்.

கோயம்புத்தூர்

நாகர்கோவில்

வளரும் சென்னை ஜெப கோபுரம்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

கர்த்தருடைய கிருபையினாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் – சென்னை துரைப்பாக்கம் பகுதியில் 14.11.2022 அன்று புதிய ஜெப கோபுரத்தின் கட்டிட வேலைளை ஆரம்பிக்க அவர் கிருபை செய்தார். தற்போது இரண்டாவது தள வேலைகள் முடிந்து, மூன்றாவது தள வேலைகள் நடந்துகொண்டிருக்கிறது. எனவே

கட்டுமானப்பணிகள் தங்கு தடையின்றி நடைபெற உங்கள் ஜெபங்களில் தொடர்ந்து தாங்குங்கள். இதுவரை நீங்கள் ஏறெடுத்த ஜெபங்களுக்கும், கொடுத்த உதவிகளுக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துகிறோம். ஆண்டவர் தாமே உங்கள் தியாக சிந்தையை நினைத்தருளி கீழ்க்கண்ட வேத வசனத்தின்படி உங்களையும், உங்கள் குடுமபத்தினரையும் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

"சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான்" (மத்தேயு 10:42).

Marvel Matrimony

மார்வெல் திருமண தகவல் மையம்

மார்வெல் திருமண தகவல் மையம், ஜெபமும், ஜெயமும் நிறைந்த ஒரு இல்லற வாழ்க்கையை ஆரம்பிக்க உதவியாக இருக்கிறது. கடந்த நாட்களில் இந்த சேவையின் மூலம் ஆண்டவர் அநேக திருமணங்களை நடத்திக் கொடுத்துள்ளார். இப்பொழுது இலவசமாக பதிவு செய்யும் வசதியும் உள்ளது. எனவே, உங்கள் வாழ்க்கைத் துணையை கண்டடைய marvelmatrimony.com என்ற எங்களது இணையதளத்தில் பதிவு செய்யுங்கள்.

தொடர்பு எண்கள்: 7824855999 || 7824877999

இமெயில் முகவரி: info@marvelmatrimony.com

கிளை அலுவலக தொடர்பு எண்கள்	
சென்னை	044-24547999 || 78248 55999
மும்பை	022 – 35675001 || 9930737999
நாகர்கோவில்	04652- 354999 || 9884480999
கோயம்புத்தூர்	0422 – 2605099 || 78239 50999

வாரந்தோறும் வெள்ளிக்கிழமை நேரம்

காலை 11:00 மணி முதல்
மதியம் 12:30 மணி வரை

ஷேமம்

வாராந்திர

உபவாச கூடுகை

இந்த உபவாசக் கூடுகையில், வியாதியஸ்தர்கள், குடும்ப சமாதானம் இழந்தவர்கள், பிசாசின் பிடியில் இருப்பவர்கள் யாவருக்காகவும் ஜெபங்கள் ஏறெடுக்கப்படும்.

நாகர்கோவில், மும்பை மற்றும் கோயம்புத்தூர் பகுதியிலுள்ளவர்கள், ஷேமம் உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி உங்களை அன்போடு அழைக்கிறோம். மேலும் விவரங்களுக்கு:

நாகர்கோவில்

பாக்கியம் திருமண மண்டபம்
எண். 177, WCC ரோடு,
YWCA எதிர்புறம்,
நாகர்கோவில் – 629001
PHONE : 9884480999
04652 - 354999

கோயம்புத்தூர்

கோவை ஆறுதலின் தோட்டம்,
NO. 34, சித்திரைச் சாவடி,
சிறுவாணி மெயின் ரோடு, தென்கரை,
(ஸ்பிக் அருகில்/வின்சர் கார்டன் எதிர்புறம்)
கோயம்புத்தூர் – 641 101
PHONE : 78239 50999
0422 - 2605099

மும்பை

மும்பை ஜெப கோபுரம்,
ஷரத் இண்டஸ்ட்ரீயல் எஸ்டேட்,
காலா எண். B-57, லேக் ரோடு,
போலீஸ் ஸ்டேஷன் அருகில்,
பாண்டுப் மேற்கு, மும்பை – 400 078
PHONE : 99307 37999
022 - 35675001

சகோதரி ஸ்டெஃபி ஸ்டீபன்,
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை

குறை சொல்லாதே, நன்றி சொல்!

ஹலோ பிரண்ட்ஸ்,

ஆண்டவருடைய நாமத்தில் உங்கள் யாவரையும் வாழ்த்தி, ஆசீர்வதிக்கிறேன். குட்டிப் பிள்ளைகள் எல்லாரும் எப்படி இருக்கின்றீர்கள்? ஆண்டவர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிக்கும்படி நான் அனுதினமும் கருத்தாய் ஜெபித்து வருகிறேன். கவலைப்படாதிருங்கள்.

இம்மாதம் 5-ஆம் தேதி ஆசிரியர் தினத்தை நாம் கொண்டாடுகிறோம். சிறு வயதிலேயே உங்களை உருவாக்கி வரும் ஆசிரியர்களுக்காக ஜெபியுங்கள். இந்த மாதமும் ஒரு குட்டிக் கதையோடு தான் நான் உங்கள் மத்தியில் வந்திருக்கிறேன். தாத்தா என்றால் குட்டிப் பிள்ளைகளுக்கு மிகவும் பிடிக்கும் தானே, எனக்கும் தாத்தாவை மிகவும் நன்றாக பிடிக்கும்.

ஒரு ஊரில், ஒரு தாத்தாவும், பேரன் ஆன்ட்ரூவும் இருந்தார்கள். அவர்கள் இருவரும், எப்பொழுதும் ஒற்றுமையாகவும், சந்தோஷமாகவும் எந்தவொரு காரியத்தையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளும் மனப்பக்குவம் உடையவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் தாத்தாவோ மனநிறைவில்லாமல், ஒரு திருப்தியில்லாத வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தார். எப்பொழுது பார்த்தாலும், ஏன் காலையிலேயே வெயில் அடிக்கிறது? மழை பெய்தால், ஏன் மழை பெய்கிறது? ஏன் நான் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறேன்? எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? என்று எப்பொழுதும் புலம்பிக்கொண்டே, ஒன்றன் பின் ஒன்றாக குற்றம் சொல்லிக்கொண்டே இருந்தார்.

ஒரு நாள் ஆன்ட்ரூ, தாத்தா எப்பொழுதும் எல்லாரையும் குற்றம் சொல்லுகிறாரே, இந்த முதிர் வயதிலும், ஆண்டவர் அவருக்கு எவ்வளவோ ஆசீர்வாதங்களை கொடுத்து உயர்த்தி வைத்திருக்கிறாரே, அதற்கு நன்றி சொல்லுவதை விட்டுவிட்டு, அவர் புலம்புகிறாரே என்று கவலைப்பட்டான். பேரன் தன் தாத்தாவுக்குப் ஒரு பாடம் புகட்ட விரும்பினான். தாத்தாவைப் பார்த்து, "தாத்தா, தாத்தா நான் உங்களிடம் அநேக காரியங்களைக் குறித்து பேச வேண்டும். ஆகவே, நாம் இருவரும் சேர்ந்து இன்று மாலை பூங்காவிற்குச் செல்வோம்" என்று அழைத்தான். தாத்தாவும், சரி சும்மா தானே இருக்கிறோம் என்று பேரனோடு பூங்காவிற்குச் சென்றார்.

இருவரும் பூங்காவிற்குச் சென்றதும், ஆன்ட்ரூ தாத்தாவை நோக்கி, ஆண்டவர் உங்களுக்கு எவ்வளவோ நன்மைகளை செய்துள்ளார். எத்தனையோ வியாதிகள், விபத்துக்கள், ஆபத்துக்கள் உங்களுக்கு ஏற்பட்டபோதும், அதிலிருந்தெல்லாம் அவர் அற்புதமாய் உங்களை விடுவித்து, வெளியே கொண்டு வந்திருக்கிறார். அதிலும் குறிப்பாக, சமீபத்தில் நடந்த விபத்தில் நீங்கள் மரித்திருக்க வேண்டும். ஆனால், ஆண்டவர் உங்களுக்கு உயிர் பிச்சை தந்துள்ளார். ஒவ்வொரு நாளும் நல்ல உணவு, உடை, உறைவிடம் கொடுத்துள்ளார். நல்ல குடும்பத்தை, உறவினர்களை, நண்பர்களை தந்திருக்கிறார். ஆனால் நீங்களோ எதற்கெடுத்தாலும் குற்றம் சொல்லிக்கொண்டே இருக்கின்றீர்களே. கர்த்தருடைய சமூகத்தில் கண்களை மூடி, அவர் உங்களுக்குச் செய்துள்ள இந்த நல்ல காரியங்களுக்கெல்லாம் நீங்கள் நன்றி சொல்ல வேண்டாமா? மேலும் தாவீது எப்படி ஆண்டவருக்கு நன்றியுள்ளவராய் இருந்தார்? என்பதை வேத புத்தகத்திலிருந்து தாத்தாவிற்கு வாசித்துக் காட்டினான்.

"கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்" (சங்கீதம் 116:12,13).

இப்படி தாவீது நன்றியோடு ஆண்டவரை துதித்ததினால் தான், சாதாரணமாக ஆடு மேய்த்துக்கொண்டிருந்தவனை, அவர் ராஜாவாக உயர்த்தினார். அதுபோல தாத்தாவும் ஆண்டவருக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று பேரன் சொன்னான்.

இதை கேட்டதும், தன் பேரனைப் பார்த்து, "இந்த சிறு வயதில் ஆண்டவர் உனக்குத் தந்துள்ள கிருபை கூட எனக்கு இல்லையே" என்று மனம் வருந்தினார். மனம் மாறி, தன் இருதயத்தில் குத்துண்டவராக, "ஆண்டவரே இந்நாள் வரை நீர் என்னுடைய வாழ்வில் செய்துள்ள நன்மைகளுக்காக நன்றி செலுத்துகிறேன். இனிமேல் நான் பிறரை ஒருபோதும் குற்றம் சொல்லமாட்டேன். என்னை தயவாய் மன்னியும்" என்று தன் இருதயத்தை அவருக்கு ஒப்புக்கொடுத்தார். அன்றிலிருந்து தாத்தா அனுதினமும் காலையில் எழுந்ததும், ஆண்டவருடைய பாதத்தில் காத்திருந்து, ஜெபத்திலும், வேத வாசிப்பிலும் உறுதியாய் தரித்திருந்தார். ஒவ்வொருநாளும் கர்த்தருக்கு தவறாமல் நன்றி சொல்லி, அவரை மகிமைப்படுத்தினார்.

ஆம் பிரியமான செல்லப் பிள்ளைகளே, ஆண்டவர் உங்களுக்குச் செய்த சின்ன சின்ன அற்புதத்திற்குக் கூட நீங்கள் நன்றி சொல்லும்போது, அவருடைய இருதயம் மகிழும். அப்பொழுது அவர் இன்னும் என் பிள்ளைக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டும் என்று, நினைத்து உங்களை ஆசீர்வதிப்பார், அணைத்து முத்தமிடுவார் (மாற்கு 10:13-16). எனவே, கீழ்க்கண்ட வேத வசனங்களை மனப்பாடம் செய்து, உங்கள் வாழ்வில் செயல்படுத்த மறவாதிருங்கள்.

"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" (சங்கீதம் 103:1,2).

மேலும் எப்பொழுதும் உங்களிடம் இருப்பதை வைத்து சந்தோஷமாக இருங்கள். அப்பொழுது உங்கள் எதிர்காலம் இன்னும் பிரகாசமுள்ளதாய் மாறும் (ஏசாயா 54:10).

கருப்பொருள் - குறை சொல்லாமல், நன்றி சொல்!

ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

ஜெபம்

அன்பின் ஆண்டவரே, இந்த சிறுவர் பகுதியை வாசிக்கும் ஒவ்வொரு பிள்ளைகளையும் ஆசீர்வதித்தருளும். அவர்கள் பிறரை குறைசொல்லாமல், கர்த்தர் அவர்கள் வாழ்வில் செய்துள்ள நன்மைகளுக்கு அனுதினமும் நன்றி சொல்லி வாழ கிருபை தாரும். வீண் பொறாமை, பிறரை குற்றம் சுமத்துதல், பொய், களவு போன்ற கெட்டப் பழக்கங்கள் சிறு பிள்ளைகளிடத்தில் இருக்குமேயானால், அவற்றையெல்லாம் எடுத்துப்போடும். அவர்களை கல்வியிலும், ஒழுக்கத்திலும் மிகச் சிறந்தவர்களாக மாற்றும். வாழ்வில் உயர்ந்த நிலைக்கு அவர்களைக் கொண்டு வாரும், அற்புதம் செய்யும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் ஜீவனுள்ள நல்ல பிதாவே, ஆமென்.

வாலிபர் பகுதி

Dr. பவ்யா டெரில் ஸ்டீபன்,
தேவனின் அன்பு ஊழியங்கள்

கர்த்தர் என் நங்கூரம்!

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப தம்பி, தங்கைகளே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இம்மாதம் 5-ஆம் தேதி ஆசிரியர் தினத்தை நாம் கொண்டாடுகிறோம். இந்த நன்நாளில், சிறு வயதிலிருந்தே படிப்பில் நம்மை உருவாக்கிய ஆசிரிய பெருமக்களுக்காக கருத்தாய் ஜெபிப்போம். புதிய மாதத்தில், "கர்த்தர் என் நங்கூரம்" என்ற தலைப்பில் உங்களோடு கூட பேச விரும்புகிறார். அதற்கு ஆதாரமாக அவர் கொடுத்த மூல வசனம்

"அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது" (எபிரெயர் 6:19).

பிரியமான வாலிபர்களே, நீங்கள் எல்லாரும் சந்தோஷமாக, சமாதானமாக இருப்பீர்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். இந்த மாதத்தில் ஆபிரகாமைப் போல, கர்த்தரை இறுகப் பிடித்துக்கொண்டு, அவர் தான் என் நங்கூரம் என்று அவரில் பெலப்படுவோம். அற்புதங்களைப் பெற்று மகிழ்வோம்.

ஆபிரகாம் கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைத்து, அவரை நங்கூரமாக இறுகப் பிடித்துக்கொண்டபடியால், ஆண்டவர் அவரை உயர்த்தி, அழகு பார்த்தார். அவருக்குள் கீழ்க்கண்ட விலையேறப்பெற்ற குணாதிசயங்கள் இருந்தன.

1] கர்த்தர் சொன்னபடி செய்கிறவர் [ஆதி.; 12:4]

2] தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர் [ஆதி. 12:5, 22:12].

3] தேவனுக்குப் பயந்திருந்தவர் [ஆதி. 22:12].

4] தேவனை தவறாமல் தொழுதுகொள்ளுபவர் [ஆதி. 12:8; 13:4; 21:33].

5] நன்மையானதை விட்டுக்கொடுக்கும் சுபாவமுடையவர் [ஆதி. 13:9]

6] சகோதரனுக்காய் யுத்தம் செய்கிறவர் [ஆதி. 14:15,16]

7] எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தவர் [ஆதி. 14:20].

8] எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர் [ஆதி. 18:2].

9] மற்றவர்களின் அழிவை விரும்பாதவர் [ஆதி. 18:25].

10] விசுவாச வீரனாய் இருந்தவர் [எபி. 11:8].

இப்படிப்பட்ட நல்ல குணங்கள் ஆபிரகாமின் வாழ்க்கையில் இருந்ததால், ஆண்டவர் எப்பொழுதும் அவனோடு கூட இருந்தார். ஆபிரகாமும் கர்த்தரை நங்கூரமாக இறுகப் பிடித்துக்கொண்டார். அவனுடைய வாழ்க்கையில் நங்கூரமாயிருந்த 3 காரியங்களைக் குறித்து, இந்த மாதத்தில் சுருக்கமாக தியானித்து, ஜெபத்திற்குள் கடந்து செல்வோம்.

1] நம்பிக்கை என்ற நங்கூரம்

எபிரெயர் 6:19-ல் நாம் வாசிக்கிறோம், "அந்த நம்பிக்கை நமக்கு நிலையான உறுதியும், ஆத்தும நங்கூரமாக இருக்கிறது". ஆபிரகாம் ஆண்டவரை முற்றிலும் நம்பியிருந்தான். கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, நீ உன் தேசத்தையும், உன் தகப்பனுடைய வீட்டைவிட்டுப் புறப்பட்டு,

நான் காட்டும் கானான் தேசத்திற்குப் போ. அங்கு நான் உன்னை ஆசீர்வதித்து பெரிய ஜாதியாக்குவேன்" என்றார் (ஆதி. 12:1,2). இதைக் கேட்ட ஆபிரகாம் எதுவுமே ஆண்டவரிடம் எதிர்த்துப் பேசவில்லை. அவர் கொடுத்த வாக்குத்தத்தத்தை உரிமைபாராட்டி, அதை நங்கூரமாக, இறுகப் பிடித்துக்கொண்டான். ஆண்டவர் காண்பித்த, கானான் தேசத்திற்கு நேராக கடந்து சென்றான். ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டான்.

பிரியமான வாலிபப் பிள்ளைகளே, நாமும் ஆபிரகாமைப் போல கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தங்களை நங்கூரத்தைப் போல உறுதியாய் பிடித்துக்கொண்டு, அதை உரிமை பாராட்டி நம்முடையதாக்கிக் கொள்ள வேண்டும். ஆபிரகாம் அப்படித்தான் செய்தார். கர்த்தர் அவனை ஆசீர்வதித்து உயர்த்தினார். அதுபோல நீங்களும் ஆண்டவரை உங்கள் வாழ்வில் நங்கூரமாக பிடித்துக்கொண்டு, அவருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கும்போது, உங்கள் வாழ்விலும் ஆண்டவர் மகிமையான காரியங்களைச் செய்வார். ஆகவே, அவரை இறுகப் பிடித்துக்கொள்ளுங்கள்.

2] நிலையான, உறுதியான சமாதானம் என்ற நங்கூரம்

ஆபிரகாம் யாரிடமும் சண்டை போடாமல், சமாதானமாக இருக்கும் குணம் படைத்தவர். லோத்து இந்த நிலம் எனக்குக் கண்டிப்பாக வேண்டும் என்று ஆபிரகாமிடம் கேட்டபோது, அதை ஆபிரகாம் மனப்பூர்வமாக விட்டுக்கொடுத்து, எது வேண்டுமோ எடுத்துக்கொள் என்று சொன்னான் (ஆதியாகமம் 18:8,9). எப்பொழுதும் சமாதானத்தை ஆபிரகாம் விரும்பினபடியால், ஆண்டவர் பாலும் தேனும் ஓடுகிற, நலமும், விசாலமுமான கானான் தேசத்திற்கு அவனை அழைத்து வந்தார். அதுமட்டுமல்ல, ஆண்டவர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொண்டார் (எசாயா 26:2,3). ஆபிரகாம் உலகப்பிரகாரமான காரியங்கள் மேல், பொருட்கள் மேல் நம்பிக்கை வைக்காமல், கர்த்தர் நல்லதைச் செய்வார், சிறந்ததைக் கொடுப்பார் என்று அவரை நங்கூரமாகப் பிடித்துக்கொண்டான். இதனால் தான் ஆண்டவர் ஆபிரகாமை ஆசீர்வதித்து, உயர்த்தினார்.

ஆம் எனக்கன்பான வாலிபப் பிள்ளைகளே, நம்முடைய வாழ்க்கையிலும் ஆபிரகாமைப்போல எப்பொழுதும் மனநிறைவுடன், மனஉறுதியுடன் எல்லாரிடமும் சமாதானமாய் இருக்கும்போது, ஆண்டவர் நிறைவான ஆசீர்வாதங்களை நமக்குத் தந்தருள்வார். நம்மை சேற்றிலிருந்து தூக்கி, கன்மலையின் மேல் நிறுத்துவார். வாழ்வின் உயர்ந்த நிலைக்கு நம்மையும் கொண்டு வருவார். எனவே, கவலைப்படாதிருங்கள்.

3] தைரியம் என்ற நங்கூரம்

ஆபிரகாம் விசுவாசத்தில் வல்லவனாய் இருந்ததால், கர்த்தர் அவனை சோதித்தார் (ஆதி. 22:1). ஆபிரகாமின் ஒரே மகன் ஈசாக்கை எனக்கு பிலியிட வேண்டும் என்று ஆண்டவர் சொன்ன போது, அதைக் கேட்டு மனம் தடுமாறாமல், அவன் தைரியமாய் இருந்தான் (ஆதி. 22:2). ஆபிரகாம், அவரிடம் எந்த கேள்வியும் கேட்காமல், கர்த்தர் என் நங்கூரமாய் இருக்கிறார் என்று அவர் மேல் நம்பிக்கை வைத்து, ஈசாக்கை மோரியா மலை தேசத்தில், பலிசெலுத்தும்படி கொண்டு சென்றான் (ஆதி. 22:3). தன் வேலைக்காரரை நோக்கி, கழுதையை இங்கே நிறுத்துங்கள். "நானும், பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய் தொழுதுகொண்டு, உங்களிடம் திரும்பி வருவோம்" என்று தைரியம் என்ற நங்கூரத்தை உடையவனாய், விசுவாச வார்த்தைகளைப் பேசினான் (ஆதி. 22:5). முடிவில் ஆபிரகாம் கத்தியை எடுத்து, தன் மகன் ஈசாக்கை வெட்ட முற்பட்டபோது, கர்த்தருடைய தூதனானவர், "ஆபிரகாமே, ஆபிரகாமே என்று அழைத்து, பிள்ளையாண்டான் மேல் உன் கையை போடாதே" என்றார் (ஆதியாகமம் 22:4-12).

ஆம் இந்த விசுவாச சோதனையில், ஆபிரகாம் வெற்றிபெற்றார். ஆபிரகாம் ஆண்டவரை ஒரு நங்கூரமாய், இறுகப் பிடித்துக்கொண்டதினால், அவர், அவனுடைய விசுவாசத்தை கனப்படுத்தினார்.

பிரியமான வாலிப தம்பி தங்கைகளே, இன்றைக்கும் வாலிபப் பிள்ளைகளுடைய வாழ்வில் சோதனைகள் வரும்போது, பிரச்சனைகள் அவர்களை நெருக்கும்போது, அதை தாங்கிக்கொள்ள இயலாமல், உடனடியாக தற்கொலை முடிவுக்கு நேராக அநேகர் கடந்து செல்வதை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட காரியங்களை விட்டுவிட்டு, இன்றைக்கே நாம் மனம் திரும்புவோம். நாம் எதிர்கொள்ளும் ஏற்றத் தாள்வுகளில் ஆண்டவர் தான் என் நங்கூரம், அவர் என்னை ஒருபோதும் கைவிடமாட்டார் (சங்கீதம் 34:10). அவர் எனக்கென முன்குறித்த ஆசீர்வாதங்களை ஏற்ற வேளையில் தருவார் என்று அவருடைய பாதத்தில் பொறுமையாய் ஜெபத்திலே காத்திருப்போம். ஆபிரகாமைப் போல் தைரியமாக, ஆண்டவர் தான் என் நங்கூரம் என்று அவரை ஏற்றுக்கொள்வோம். அவரில் மகிழ்ந்திருப்போம். ஆமென்.

ஆண்டவர் தாமே இப்படிப்பட்ட கிருபைகளை, ஆசீர்வாதங்களை உங்களுக்குத் தந்தருளி, இந்த மாதம் முழுவதும் உங்களை கரம் பிடித்து நடத்தும்படி நான் கருத்தாய் ஜெபித்துள்ளேன். தொடர்ந்து ஜெபிப்பேன் என்று வாக்குக் கொடுக்கிறேன்.

ஆண்டவர் தாமே உங்கள் வாழ்வில் நங்கூரமாயிருந்து, உங்களை வழி நடத்துவராக, ஆமென்.

ஜெபம்

அன்பான ஆண்டவரே, இந்த புதிய மாதத்திற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். இம்மட்டும் நீர் எங்களை நடத்தினீர், உமக்கு ஸ்தோத்திரம். ஆண்டவரே எங்கள் வாழ்க்கையில் எல்லா காரியங்களிலும், நீர் தான் எங்கள் நங்கூரமாய் இருக்கிறீர். ஆபிரகாமைப் போல விசுவாசத்தில் பெலன் கொண்டு, உம்மேல் நம்பிக்கை வைத்து வாழ என்னை முழுவதும் உம்முடைய கரத்தில் ஒப்புக்கொடுக்கிறேன். எல்லாத் தடைகளையும் உடைத்து, எங்களுக்கென வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை கர்த்தர் தந்து, எங்களை ஆசீர்வதித்து உயர்த்தும். ஆபிரகாமைப் போல, நாங்களும் உம்மை நங்கூரமாய் பிடித்துக்கொண்டு வாழ எங்களுக்குக் எங்களுக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், ஜீவனுள்ள நல்ல பிதாவே, ஆமென்.

தொலைக்காட்சி ஊழிய பங்காளர் பகுதி

சகோதரர் ஸ்டீபன் அவர்கள், "அன்பரின் சத்தம்" மற்றும் "அன்பரின் குரல்" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தயாரித்து, அனுதினமும் ஒளிபரப்பி வருகிறார்கள். இந்நிகழ்ச்சிகளில் சகோதரர் அவர்கள் கொடுக்கும் தேவ செய்தி, ஆயிரக்கணக்கானோருக்கு பிரயோஜனமாய் அமைந்துள்ளது. அநேகரை இரட்சிப்பிற்குள் வழிநடத்திக் கொண்டே இருக்கிறது. ஆகவே, இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.

"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது" (எரேமியா 15:16).

மேலும் இந்நிகழ்ச்சிகளை தயாரிக்கவும் தொடர்ந்து ஒளிபரப்பவும், தயாரிப்பு மற்றும் நிர்வாக செலவுகள் உட்பட அநேக செலவுகள் உள்ளன. ஆவியானவர் உங்களோடு பேசுவாரானால், எங்கள் தொலைக்காட்சிகளில், ஒரு நிகழ்ச்சியை, உங்கள் பிறந்த நாள் அல்லது திருமண நாள் சார்பாகவோ, உங்கள் தொழில் நிறுவனத்தின் சார்பாகவோ ஒளிபரப்பி, இவ்வூழியத்தை தாங்கலாம்.

கடந்த மாதம் தங்கள் உதாரத்துவமான காணிக்கையினால் இவ்வூழியத்தை தாங்கியவர்கள்:

Dr. திலிப்குமார் & Dr. ரூத் திலிப்குமார் குடும்பத்தார், நாகர்கோவில்.

திரு. துரைசிங் குடும்பத்தார், சென்னை.

அநேகர் இரட்சிப்படைய, இக்குடும்பத்தார் செய்துள்ள தியாகத்தை ஆண்டவர் தாமே நினைத்தருளி, அவர்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக! (2 கொரிந்தியர் 9:7). அவர்கள் கையிட்டுச் செய்யும் செய்யும் காரியங்கள் ஒவ்வொன்றையும் வாய்க்கச் செய்வாராக! (ஆதியாகமம் 26:12,13). ஆமென்.

அனுதின மங்கள வார்த்தை

அன்பானவர்களே,

தேவனின் அன்பு ஊழியத்தின் சார்பாக "அனுதின மங்கள வார்த்தை" என்ற நிகழ்ச்சி Evg.T. Stephen என்ற எங்களது youtube சேனல் வாயிலாக தினந்தோறும் காலை 6:00 மணிக்கு ஒளிபரப்புவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனுதின ஆசீர்வாதத்திற்காக இந்த நிகழ்ச்சியை தவறாமல் காண உங்களை மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

GENESIS CREATIONS

MEDIA ACADEMY

CERTIFICATION IN MEDIA TECHNOLOGY

COURSE CURRICULAM INCLUDES :

- VIDEOGRAPHY
- PHOTOGRAPHY
- VIDEO EDITING
- DRONE CINEMATOGRAPHY
- LIVE SOUND MIXING
- STUDIO RECORDING
- PHOTOSHOP
- LIVE VIDEO MIXING
- LIVE STREAMING

ADDRESS:
GENESIS CREATIONS,
No. 108, First Floor, industrial estate,
Perungudi, Chennai-600 096.

+91-7824850999 Info@genesiscreations.in www.genesiscreations.in

தேவனின் அன்பு ஊழியங்கள்
நடத்தும்

செப்டம்பர்
02
சனிக்கிழமை
09:00 AM

நடைபெறும் இடம்
BKN ஆடிட்டோரியம்,
5 / 6, ரித்தர்டன் சாலை, வேப்பேரி,
(அனிதா மெட்ரிக்குலேஷன் பள்ளி அருகில்)
சென்னை - 600 007.

LIVE STREAMING ON
EVG.T.STEPHEN
GODSLOVEMINISTRIES.CO.IN

அன்பரின் பாதத்தில் ஒரு நாள்

ஆறுதலை தேடி ஒரு நாள்

செப்டம்பர்
03
ஞாயிற்றுக்கிழமை
மாலை
5:30 மணி

நடைபெறும் இடம்
சேக்ரட் ஹார்ட் மெட்ரிக்குலேஷன்
மேல்நிலைப் பள்ளி,
3 - வது மெயின் ரோடு, தேவராஜ் நகர்,
ECR இணைப்பு சாலை,
சோழிங்கநல்லூர், சுங்கச்சாவடி அருகில்,
சென்னை - 600 119.

துதி ஆராதனை
Bro.டெரில் ஸ்டீபன்

தேவ செய்தி
சுவி.T.ஸ்டீபன்

துதி ஆராதனை
Dr.பவ்யா டெரில்

SEPTEMBER 08 To 27

BLESSING Meetings In U.S.A

SEP 08 FRIDAY 6.30PM EST

COTTAGE PRAYER MEETING AT NEW YORK
4 Senator Levy Drive, Suffern, NY 10901
For further Details Sis.Synthia +1-845-596-2771

SEP 09 SATURDAY 6.00PM EST

HEALING & DELIVERANCE MEETING
Jesus Family Church,
2950 Belfort Road, Jacksonvile, Florida.
For further Details Pas.Jacob +1-843-469-4624

SEP 10 SUNDAY 10.00AM EST

HEALING & DELIVERANCE MEETING
Jesus Family Church,
2950 Belfort Road, Jacksonvile, Florida.
For further Details Pas.Jacob +1-843-469-4624

SEP 12 TUESDAY 6.30PM EST

COTTAGE PRAYER AT NEW JERSEY
5 Pavlocak ct, Edison NJ 08820
For further Details Bro.Jabastin +1-732-423-7112

SEP 13 WEDNESDAY 7.00 PM CDT

CHURCH MEETING AT CHICAGO
Downers Grove Community Church,
6600 Fairview Avenue, Downers Grove IL 60516
For further Details Bro.Robinson +1-708-439-2573

SEP 15 FRIDAY 6.30PM MDT

COTTAGE PRAYER MEETING AT COLOARDO
10488 Evansville Cir Parker,
Colorado-80134
For further Details Bro.Steve +1-720-201-0006

SEP 16 SATURDAY 6.30PM EST

HEALING & DELIVERANCE MEETING
Atlanta Tamil Church, 4798
Buford Hwy, Norcross, GA 30071
For further Details Pas.Palmer +1-404-245-7674, +1-770-723-1711

SEP 17 SUNDAY 10.00AM EST

SUNDAY SERVICE
Atlanta Tamil Church, 4798
Buford Hwy, Norcross, GA 30071
For further Details Pas.Palmer +1-404-245-7674, +1-770-723-1711

SEP 19 TUESDAY 6.30PM PST

COTTAGE PRAYER MEETING
3720 Ocala Cir, Corona, CA-92881
For further Details Bro.Bonny +1-949-396-4791, +1-949-524-5225

SEP 20 WEDNESDAY 6.30PM PST

COTTAGE PRAYER MEETING
Catalina Drive, Livermore, California
For further Details Bro.James+1-925-348-5180

For details Bro. Felix George +1-973-454-9686

God's Love Ministries +91-44 24547999

SEPTEMBER
08 To 27

BLESSING Meetings In CANADA

SEP 22 FRIDAY 6:30PM PDT

PROPHETIC CONFERENCE AND FAMILY BLESSING MEETING.

Vancouver Tamil Christian Assembly
Unit 101-17670, 65A Ave,
Surrey V3S 5N4,Vancouver.

For further Details Bro.Sekhar +1-778-918-0969

SEP 23 SATURDAY 11.00AM PDT & 6:30PM PDT

PROPHETIC CONFERENCE AND FAMILY BLESSING MEETING.

Vancouver Tamil Christian Assembly
Unit 101-17670, 65A Ave,
Surrey V3S 5N4,Vancouver.

For further Details Bro.Sekhar +1-778-918-0969

SEP 24 SUNDAY 11.00AM PDT & 6.30PM PST

PROPHETIC CONFERENCE AND FAMILY BLESSING MEETING.

Vancouver Tamil Christian Assembly
Unit 101-17670, 65A Ave,
Surrey V3S 5N4,Vancouver.

For further Details Bro.Sekhar +1-778-918-0969

SEP 25 MONDAY 6.30PM PDT

COTTAGE PRAYER MEETING

Unit 17, 6588 195A St, Surrey
(Greater Vancouver), V4N 6N5

For further Details Bro.Philip +1-514-561-9647

SEP 26 TUESDAY 6.00PM PST

PROPHETIC DELIVERANCE MEETING AT SASKATOON.

Elim Church, 419 Slimmon Rd, Saskatoon,
SK S7V0E3

For further Details Sis.Priscilla +1-306-880-4724

For details Bro. Felix George +1-973-454-9686

God's Love Ministries +91-44 245 47999

God's Love Ministries
Presents
EXODUS
HOLY Tours
TOUR DATE
OCT
19-29
10 NIGHTS 11 DAYS
JORDAN || ISRAEL
PALESTINE || EGYPT
EVG.T. STEPHEN
INCLUSIONS
Land and Air Transport || Visa (all 3 countries) || 4*/5* Accommodation
Buffet Breakfast/ Lunch and Dinner || All Entry tickets || Travel Insurance
Holy Communion by Evg. T. Stephen || Baptism at Jordon River
for further details
+91 72999 47999 || +91 98414 37999
info@exodusholytours.com
www.exodusholytours.com

தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள்

தினந்தோறும்

கீழ்க்காணும் டிவி சேனல்களின் மூலமாக நமது தேவனின் அன்பு ஊழியத்தின் மங்கள வார்த்தைகளை கேட்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

நம்பிக்கை டிவியில் தினமும் இரவு 11.00 முதல் 11.30 வரை

Satellite Channel - SCV 757 | Airtel 817 | Tata Sky 1592 | Videocon 578 | TCCL 743 | Sun Direct 611 | Polimer TV 726 | Aadhar 879 | Akshaya cable 606 | Arasu Cable 600 | Jio 4G Mobile Service Provider

அதிசயம் டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை

Tamilnadu - TCCL 737 | Kanyakumari - JAK 136 | TN,Karnataka & Kerala - CTN 805 | Munnar - Top Ten 80 | European Countries - Saalai TV | Singapore & Malaysia - beeipTV 227

ஹெவன் டிவியில் தினமும் காலை 8.00 முதல் 8.30 வரை

Tamilnadu - SCV 178 | TCCL 729 | Aristo 610

ஷம்மா டிவியில் தினமும் காலை 10.00 முதல் 10.30 வரை மற்றும் இரவு 9.00 முதல் 9.30 வரை

All Cable Networks in Kanniyakumari Dist

ஜீசஸ் டிவியில் தினமும் காலை 8.30 முதல் 9.00 வரை

Kanniyakumari - TCCL 181

கிராஸ் டிவியில் தினமும் காலை 9.30 முதல் 10.00 வரை

Tamilnadu - TCCL 734

அருள் வாக்கு GCN டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை

Pondichery - AJK network - 126 | TCCL network- 179

ஆல்மைட்டி டிவியில் தினமும் இரவு 7.00 முதல் 7.30 வரை

Chennai - Crystal 160

வாரந்தோறும்

ஞாயிறுதோறும்

Angel TV
12.00 AM
12.30 AM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 1.30 PM | 8.30 PM | 10.30 PM
8.00 AM | 2.00 PM | 9.00 PM | 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

திங்கள்தோறும்

Angel TV
5.00 AM
5.30 AM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 8.30 PM | 10.30 PM | 1.30 PM
8.00 AM | 9.00 PM | 11.00 PM | 2.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur
CTN 801, VK Digital 117, Digcon 85,

உங்கள் நம்பிக்கை TELEVISION
7.30 AM
8.00 AM
Satellite Channel

செவ்வாய்தோறும்

Angel TV
5.00 AM | 9.00 PM
5.30 AM | 9.30 PM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 8.30 PM | 10.30 PM | 1.30 PM
8.00 AM | 9.00 PM | 11.00 PM | 2.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801,
VK Digital 117, Digcon 85,

புதன்தோறும்

Angel TV
8.00 AM
8.30 AM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 8.30 PM | 10.30 PM | 1.30 PM
8.00 AM | 9.00 PM | 11.00 PM | 2.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

வியாழன்தோறும்

தொவன் HEAVEN TV INDIA
8.30 PM
9.00 PM
TamilNadu

Living Jesus Tv
7.30 AM | 1.30 PM | 8.30 PM | 10.30 PM
8.00 AM | 2.00 PM | 9.00 PM | 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur
CTN 801, VK Digital 117, Digcon 85,

SUBHAVAARTHA TELEVISION
7.30 AM
8.00 AM
Satellite Channel

வெள்ளிதோறும்

Angel TV
8.00 AM
8.30 AM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 1.30 PM | 8.30 PM | 10.30 PM
8.00 AM | 2.00 PM | 9.00 PM | 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

சனிதோறும்

KING OF GLORY
7.30 PM
8.00 PM
Pondicherry

Living Jesus Tv
7.30 AM | 1.30 PM | 8.30 PM | 10.30 PM
8.00 AM | 2.00 PM | 9.00 PM | 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

ANGEL TV DETAILS (Satellite Channel)

SUN DIRECT 610 | TATA Sky 1591 | SCV 260 | AIRTEL DTH 815

தேவனின் அன்பு ஜெப கோபுரங்களுக்கு வாருங்கள்! அற்புதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

தேவனின் அன்பு ஜெப கோபுரங்கள் மூலம் ஒவ்வொரு நாளும் ஆண்டவர் மகிமையான காரியங்களைச் செய்துவருகிறார். எங்கள் ஜெப கோபுரங்கள் சென்னை, மும்பை, நாகர்கோவில் மற்றும் கோயம்புத்தூர் பட்டணங்களில் அமைந்துள்ளது. அனுதினமும் வியாதியோடும், துக்கத்தோடும், போராட்டங்களோடும் இருக்கிறவர்கள் எங்கள் ஜெப கோபுரத்திற்கு வருகை தந்து, விடுதலையடைகிறார்கள்.

"இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்" (2 நாளாகம் 7:15).

என்ற வேத வசனத்தின்படி ஆண்டவர் மகிமையான காரியங்களைச் செய்துவருகிறார்.

எங்கள் ஜெப கோபுரங்களின் முகவரி:

சென்னை ஜெப கோபுரம்,
(காலை 9:00 மணி முதல் மாலை 7:15 வரை)
எண்.14, ராமலிங்க நகர், OMR ரோடு,
SRP நூல்ஸ் அருகில், கொட்டிவாக்கம்,
சென்னை – 600 041.
Ph: 044 - 2454 7999 || 99419 50999

நாகர்கோவில் ஜெப கோபுரம்,
(காலை 9:30 மணி முதல் மாலை 6:45 வரை)
எண். 305, ஜோஸ்வா தெரு, WCC ரோடு,
CERA ஷோரூம் அருகில், CSI மெட்ரிக்குலேஷன்
ஸ்கூல் எதிர்புறம், நாகர்கோவில் – 629 001
Ph: 9884 480999 || 04652 - 354999 (During office hours).

கோவை ஆறுதலின் தோட்டம்,
(காலை 09:15 மணி முதல் மாலை 6:30 வரை)
NO. 34, சித்திரைச் சாவடி, சிறுவாணி மெயின் ரோடு,
தென்கரை, கோயம்புத்தூர் - 641 101.
(ஸ்பிக் அருகில் / வின்சர் கார்டன் எதிர்புறம்)
Ph: 78239 50999 || 0422-260 5099 (During office hours).

மும்பை ஜெப கோபுரம்,
(காலை 10:00 மணி முதல் மாலை 7:15 வரை)
ஷரத் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
காலா எண். B-57, லேக் ரோடு, பாண்டுப் மேற்கு,
போலீஸ் ஸ்டேஷன் அருகில், மும்பை - 400 078.
Ph: 99307 37999 || 022 – 35675001 (During office hours).

Email: prayer@godsloveministries.co.in Website:www.godsloveministries.co.in

24 X 7 ஜெப உதவிக்கு

044 - 2454 7999 **99419 50999**

உங்கள் ஜெபக் குறிப்புகளுக்காக ஜெபிக்க, நீங்கள் எந்த நேரத்திலும் தொலைபேசி மூலம் எங்களை அழைக்கலாம். எங்கள் ஜெப வீரர்கள் 24 மணி நேரமும் உங்களுக்காக ஜெபிக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள்!

மின்னஞ்சல் ஜெப உதவிக்கு	சமூக வலைத்தளம்	Whats App
உங்கள் ஜெப குறிப்புகளை சகோ. T. ஸ்டீபன் அவர்களுக்கு அனுப்பி, ஆண்டவரிடமிருந்து அற்புதங்களைப் பெற: prayer@godsloveministries.co.in	Evg.T.Stephen	9841040999